தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 38/மா/2021
நாள். 30.12.2021

திரு. குமார் தட்சிணாமூர்த்தி,
கோயம்புத்தூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி – எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர் மாநகராட்சி, கணபதி மாநகர் எண்.13 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.குமார் தட்சிணாமூர்த்தி என்பவரின் 24.04.2021ம் நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.05.2021 அன்று பெறப்பட்டு 38/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரது மனு விசாரணையின்போது அவர் அளித்த வாக்குமூலம், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் வாக்குமூலம், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை கவனமாக பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது: –

## ஆணை

கோயம்புத்தூர் மாநகராட்சி, கணபதி மாநகர், எண்.13 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.குமார் தட்சிணாமூர்த்தி என்பவர் தன்னுடைய 24.04.2021 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணுமாறு புகார்களை தெரிவித்துள்ளார்.

"மாநகராட்சிக்குச் சொந்தமான ஒரு பெரும்பகுதியை ஒரு தனி நபர்/ஒரு கூட்டம் அதனை ஆக்கிரமிப்பு செய்திருக்கின்றனர். கிட்டத்தட்ட 22,000 Sq.ft. இருக்கும். இந்த இடத்தை மீட்பதற்கு கோவை மாநகராட்சியால் ஒரு சிறு துளி கூட முயற்சிக்கவில்லை. ஆம், இன்று வரை கூட எவரும் எட்டி பார்க்கவில்லை. மாநகராட்சி அதிகாரிகள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு சாமரம் வீசிக் கொண்டிருக்கின்றனர்.

இது தொடர்பாக விரிவான ஒரு புகாரும் சில ஆதாரங்களுடன் கடந்த 10.02.2021–ல் மேற்படி ஆணையருக்கு Name Cover-ல் அனுப்பியிருந்தேன். அப்புகாரின் மீது ஆணையர் மற்றும் கோவை அதிகாரிகளால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று இதுவரை தெரியவில்லை.

1. ஒரு மனுதாரர் என்ற முறையில் என்னையும் கூட இதுவரை அழைக்கவில்லை. ஒரு மனுவை பெற்றால் அம்மனு மீது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை தமிழ்நாடு அரசு பல்வேறு அரசாணைகளை வெளியிட்டிருக்கிறது. ஆனால், இதன் எதையும் இவர்கள் பின்பற்றவில்லை. அனைத்துமே Fraud தனமாக இருக்கிறது.

2. ஆணையர் இந்த புகாரை வாங்கி வைத்துக்கொண்டு என்ன செய்தார்? யாரிடம் கொடுத்தார்? அல்லது இவர் அந்த இடத்தை நேரில் போய் பார்த்தாரா? அடுத்து, மனுதாரர் என்ற முறையில் என்னை ஏன் அழைக்கவில்லை? இப்படி பல்வேறு கேள்விகள் இதனுள் எழுகிறது.

3. எழுத்துமூலமாக கேள்வி கேட்டால் பதில் சொல்ல மறுக்கிறார்கள். இது RTI சட்டம், பிரிவு 2(F)–ன் கீழ் பதில் அளிக்க இயலாது என்றும் புது வியாக்னம் சொல்கிறார்கள்.

4. எல்லாமே ஒரு மோசடித்தனமாக இருக்கிறது. அரசின் சொத்தை கபளிகரம் செய்தவர்களை சும்மா விடக்கூடாது. அதற்கு துணை போன அதிகாரிகள்/அத்துனை அதிகாரிகளும் சட்டத்தின் முன் தண்டிக்க வேண்டும். அவர்களை விடக்கூடாது.

மேலும், இம்மனு, கோவை மாநகராட்சியின் ஆணையர் தான் பதில் சொல்ல வேண்டும். அவர்தான் இதற்கு பிரதான பொறுப்பாளி. அவர்தான் இதற்கு பொறுப்பானவர். விசாரணையின் போது அவரே தான் எதிர்கொள்ள வேண்டும் எனவும் Ombudsman – நடுவரை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன் ” என்று தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் மற்றும் ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆகியோரை 01.12.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.11.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

மனுதாரர் அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“கோயம்புத்தூர் மாநகராட்சியில் விளாங்குறிச்சி பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான Reserve Site 22000 சதுர அடிக்கு மேல், தனி நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆக்கிரமிப்பிற்கு மாநகராட்சி அலுவலர்களும் உடந்தையாக இருந்துள்ளனர். இது தொடர்பாக கடந்த 9 ஆண்டுகளாக மாநகராட்சி அலுவலகத்தில் பலமுறை மனுக்கள் அளித்தும் சரியாக பதில் அளிக்காமல் என்னை தட்டி கழித்து வருகின்றனர்.

மக்களின் சொத்தான மேற்கண்ட ஆக்கிரமிப்பு நிலத்தை மாநகராட்சி வசமாக்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும், இதற்கு துணையாக இருந்த மாநகராட்சி அலுவலர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது 10.02.2021 நாளிட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள விவரங்களையே எனது மேல் வாக்குமூலமாக பதிவுசெய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக் கொள்கிறேன் ”என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தனது 10.02.2021 நாளிட்ட மனுவில் “ கோவை மாநகர பகுதியை விரிவுபடுத்தும்போது கடந்த 8 வருடங்களுக்கு சற்று முன் இதன் பகுதி (விளாங்குறிச்சி கிராமம்) மாநகரப்பகுதிக்கு வந்தது. அதற்கு முன், SS குளம் ஊராட்சி ஒன்றியம்–விளாங்குறிச்சி ஊராட்சியின் கீழ் அமையப்பெற்றிருந்தது. இதன் மொத்தப் பரப்பளவில் (மேலே சொன்ன Sivaram Nagar) Reserve site பகுதி மட்டும் சற்றேறக்குறைய 67,000 sq.ft. ஆகும். கோவை மாநகராட்சியின் கீழ் கடந்த 2012–ல் வந்தபோது மற்ற இடங்களைப் போல் இதுவும் (Reserve Site–யை) கண்டு கொள்ளாமல் விட்டு விட்டது. அங்கே 22,000 சதுரடிக்கு மேல்

ஆக்கிரமிப்பு செய்து, படிப்படியாக ஒரு கோயிலை (சட்ட விரோதமாக) நிர்மாணித்திருக்கின்றனர். அதன்சுற்று வட்டார நபர்களான R.வேதபுரி, ஐயப்பன், பாண்டியராஜ் மற்றும் ஹரிஹரன் போன்றோர்கள். இவர்கள் கடந்த 2003–ல் ஆக்கிரமிப்பு செய்யத் துவங்கி, மெல்ல, மெல்ல ஒவ்வொன்றாக வளைத்திருக்கின்றனர். இதற்கு EB-AE/MLA/VAO/Local Bodies (தற்போது கோவை மாநகராட்சி) உள்ளிட்டோரும் துணையாக செயல்பட்டுள்ளனர். முதலில் தனி நபர் சொத்து (R.வேதபுரி), பின்னர் Trustee என்றும் மாற்றிக்கொண்டனர்.

ஒரு பிரமாண்டமான ஏரியாவையே ஆக்கிரமிப்பு செய்தது கொடுமையானது தான். இது மக்களுக்கான சொத்து. அதாவது பொது சொத்து, முழுக்க, முழுக்க உள்ளாட்சி அமைப்பின் கீழ் கொண்டு வரவேண்டிய சொத்தாகும். (in Kovai Corporation) இதில் 22,000 சதுர அடிக்குமேல் ஆக்கிரமிப்பு செய்து ஒரு பிரமாண்ட கோயிலையே நிர்மாணித்திருக்கின்றனர். (அது கோயிலும் அல்ல. . .).

ஆம். . ., அதாவது திருமணம் நடத்திக் கொள்வதற்கு ஒரு rate, வயசு மூப்பு சடங்கிற்கு ஒரு rate, வளைகாப்பிற்கு ஒரு rate, வளைகாப்பிற்கு முன்னதாக 'அவர்கள்' சேர்மானத்திற்கும் ஒரு rate, இப்படி ஒவ்வொன்றிற்கும் ஒரு rate வைத்து வசூலித்து வருகின்றனர்.

மேலும் ஒரு சிறு தகவலாக ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதாவது, அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு HR & CE கோயில்களிலே இவ்வாறு திருமணம் நடத்திக்கொள்ள அவ்வளவாக அனுமதிப்பதில்லை. இருப்பினும், ஏகப்பட்ட நிபந்தனைகள், மற்றும் அனேக ஆவணங்கள் சமர்ப்பிப்பு அதன் பின்னர் நீடித்த பரிசீலிப்பு (fully scrutinized) இவைகளெல்லாம் திருப்தியானால் அதன் பின்னரே திருமணம் நடத்திக்கொள்ள அனுமதிப்பார்கள். அதற்கும் குறைந்தது ஒரு மாதம் கூட ஆகும். ஆம்.. முன்னதாக VAO/RI போன்ற வருவாய் சான்று/வயது சான்று/இருப்பிட சான்று, அடையாள சான்று மற்றும் திருமணம் இதற்கு முன் ஆகவில்லை என்று அந்த சான்றும் இப்படி பல்வேறு சான்றுகளை அவர்கள் கோருவார்கள். குறிப்பாக பெற்றோர் தான் அதற்கு விண்ணப்பதாரரே. ஆனால், இங்கே இந்த ஆக்கிரமிப்பு கோயிலில் நேராக ஒருவரை இழுத்துக்கொண்டு வரலாம். அவர்களுக்கு (பெண்ணிற்கு), அவனுக்கோ ஏற்கனவே திருமணம் ஆகியிருக்கலாம். அது பிரச்சினை இல்லை. . . . . இவர்கள் செய்து வைப்பார்கள்..... இது போன்ற செயல்களால் சமூக குற்றங்கள் பெருகுவதற்கும் இவர்கள் காரணமாக இருக்கிறார்கள்.

இருக்கட்டும், அவர்கள் என்ன வேண்டுமென்றாலும் செய்து கொள்ளட்டும். அதற்கு அவர்கள் தனித்து இடம் வாங்கி (சொந்தமாக வாங்கி) அங்கே எதையாவது கட்டிக்கொண்டு எதையாவது வசூல் செய்து கொள்ளட்டும். சுதந்திர இந்தியாவில் ஏமாற்றுவதற்கும் உரிமை இருக்கத்தான் செய்கிறது. அவ்வாறே அவர்கள் செய்து கொள்ளட்டும். ஆனால் இங்கே பொது சொத்தில் உரிமை கொண்டாடக்கூடாது. அதுதான் என் வாதம்.

மாநகராட்சி இது சம்மந்தமாக கவனம் கொண்டதா ? ஆய்வுகள் எதுவும் செய்ததா ? ஆக்கிரமிப்பு தொடர்பாக ஏதேனும் நடவடிக்கை எடுத்ததா ? அல்லது கவனத்திற்கே வரவில்லையா ? இதற்கு மாநகராட்சி ஆணையர் தான் பதில் சொல்ல வேண்டும்.

ஊராட்சி அமைப்பிடமிருந்து (Panchayat) மாநகராட்சிக்கு மாற்றம் செய்யும் போது அதனை take over செய்த அதிகாரிகள் இதனை கண்டறிந்தார்களா ? அல்லது பின்னாளில் தான் இதனை கண்டறிந்தார்களா ? எப்போது தான் கண்டறிந்தார்கள் ? அல்லது கண்டறியாமல் இருப்பதற்கு காரணம் தான் என்ன ? இதற்கும் மாநகராட்சி ஆணையர் தான் பதில் சொல்ல வேண்டும்.

மேற்படி reserve site–ன் ஒரு பகுதியில் மாநகராட்சியால் பிரமாண்டமான ஒரு over head water tank–ம் கட்டப்பட்டு வருகிறது, கடந்த இரண்டு வருடங்களாக.....

இதனை ஆய்வு செய்த அதிகாரி யார்? அதிகாரிகள் யார்? இவ்–water tank கட்ட இடம் தேர்வு செய்யும்போது யார், யார் ஆய்வு செய்தனர்? அப்போது முழு விஸ்தீரணத்தையும் ஆய்வு செய்தார்களா? கணக்கெடுத்தார்களா? அவ்வாறு ஆய்வு செய்யும்போது இந்த ஆக்கிரமிப்பு கண்களில் படவில்லையா? அல்லது கண்களை மூடிக்கொண்டார்களா? அல்லது உங்களுக்கு ஆதரவாக நாங்கள் இருப்போம் என்று அவர்களுக்கு சத்தியம் செய்து விட்டு வந்தார்களா? இதற்குமே மாநகராட்சி ஆணையர் பதில் சொல்ல வேண்டும். மாநகராட்சியின் website–லும் இது தொடர்பாக (encroachment) பற்றி எந்த தகவலும் இடம் பெறவில்லை. ஆவணங்கள் எதிலும் இது பற்றியான தகவலும் இல்லை. இதற்குமே மாநகராட்சி ஆணையர் பதில் சொல்ல வேண்டும்.

மாநகராட்சியின் website–லும் இது தொடர்பாக (encroachment) பற்றி எந்த தகவலும் இடம் பெறவில்லை. ஆவனங்கள் எதிலும் இது பற்றியான தகவலும் இல்லை. இதற்கும் மாநகராட்சி ஆணையர் பதில் சொல்ல வேண்டும்.

மண்டலம் வாரியாக இத்தனை அதிகாரிகள், இத்தனை அமைப்புகள் என்று பல்வேறு அமைப்புகள் (sections) ஒரு மாநகராட்சியின் கீழ் இருந்தாலும் என்ன தான் செய்தார்கள்? மேலும் மாநகராட்சியில் ஒரு இடம் கூட விட்டு விடக்கூடாது. அதிகாரிகள் சொந்த இடமான இருந்தால் இப்படி விட்டு விடுவார்களா? பொறுப்பற்றத் தனத்தின் உச்சம்.. .. அலட்சியத்தின் வெளிப்பாடு . . . அக்கறை இன்மையின் வெளிப்பாடு .

எனவே, கோவை மாநகராட்சி ஆணையர், இதனை தனி கவனம் செலுத்தி மேற்படி இடத்திற்கான மீட்பு நடவடிக்கைகளை உடனடியாக களம் இறங்கி விரைந்து செயல்பட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இந்த இடம் மட்டுமல்ல, இன்னும் அனேகப் பகுதிகள் இதுபோன்று ஆக்கிரமிப்பு செய்த வண்ணம் உள்ளனர். அதனையும் தனி கவனம் செலுத்தி விரைந்து தேவையான நடவடிக்கைகளை செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்கள் தனது 30.11.2021 நாளிட்ட கடிதத்தில் “தற்பொழுது பெய்து வரும் பெருமழையின் காரணமாக அவசர பணிகள் மேற்கொள்ள வேண்டி இருப்பதால் மனு சம்மந்தமான விசாரணையை மறு தேதிக்கு மாற்றி அமைக்க உத்திரவு பிறப்பிக்க வேண்டிக்கொள்ளப்படுகிறது” என இம்முறை மன்ற நடுவத்தை கோரியுள்ளார். ஆதலால் எதிர்மனுதாரரை 08.12.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.12.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

கோயம்புத்தூர் மாநகராட்சி (கிழக்கு மண்டலம்) உதவி செயற்பொறியாளராக(திட்டம்) பணிபுரியும் திருமதி. R.புவனேஸ்வரி 08.12.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி தனது வாக்குமூலத்தில் “ மனுதாரர் திரு.குமார் தட்சிணாமூர்த்தி என்பவர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள கோயம்புத்தூர் மாநகராட்சி, விளாங்குறிச்சி கிராமம் சிவராம் நகர் பகுதியில் அமைந்துள்ள கோவில் மற்றும் ஷெட் சுமார் 24 செண்ட் இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட மேற்கண்ட கோவில் மற்றும் ஷெட் ஆகியவற்றை அகற்றிட கடந்த 05.07.2021 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கோவில் நிர்வாகிகள் மேற்கண்ட கோவிலை அகற்றிட 6 மாத கால அவகாசம் வேண்டி 10.07.2021 மற்றும் 25.08.2021 நாளிட்ட கடிதங்களை மாநகராட்சிக்கு சமர்ப்பித்துள்ளனர் என்கின்ற விவரத்தை தெரிவித்து, மேற்கண்ட கடிதங்களின் நகலினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் ” என்று தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் தனது நாளிடப்படாத எழுத்துப்பூர்வ அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"The complainant had submitted a representation to the Coimbatore Corporation stating that the Government land is being already encroached by third parties by putting up a temple in the said site. Based on such a representation, the officials of the Coimbatore Corporation were directed to make necessary inspection and enquiry and were sought to file necessary report in this regard.

Later, a report was submitted for my perusal as per which it was revealed that the said lands which were alleged to be Government land and is encroached, was situated within Survey Field Nos. 264/1, 265, Vilankurichi Village. Initially the said lands were agricultural lands and came within the Sarkar Samakulam Panchayat Union and that as early as during the year 1995, the owners of the said fields to an extent of 15.21 Acres, had applied to the Local Planning Authority, Coimbatore, for the formation of a Lay-out under the name and style of 'Sivaram Nagar' for dividing the same into house building sites. The said Lay-out was approved in LP/DTCP No.690/95 by the Local Planning Authority, Coimbatore and 169 house building sites were sold out to various persons in accordance with the approved plan. At the time of such approval and extent of 66.996 Sq.ft. and 8784 Sq.ft. of areas were reserved for park and shops as per the approved plan. Later, during the year 2011, the areas which were situated within the Vilankurichi Village, were amalgamated into the limits of the Coimbatore Corporation, as per the orders of the Tamil Nadu Government. Presently the said lands fell within the limits of Coimbatore Corporation. The survey and inspection carried out by the officials of the Coimbatore Corporation further disclosed that a temple was constructed and used by the public in the site which was allotted for the public purpose by earmarking as 'Park' and that the said temple is in existence for the past more than 25 years. Based on such a report submitted, further actions to be carried out were under progress in accordance with the rules and regulations and the Corporation Act. At that time the complainant had submitted an application under Right of Information Act, for which due reply was given to the complainant that due action is being initiated upon his complaint.

After certain relaxations in the lock down announced by the Government, due notice is issued to the persons who had encroached into the site reserved for 'Park' by putting up a temple in it, calling upon them to remove the encroachment. The said process is being carried out in accordance with the Coimbatore Corporation Act and the same are under progress. The complainant had also contended that a Water Tank is constructed adjoining the encroachment and the survey conducted for the same would have revealed about the encroachment. In fact, the construction of the water tank was carried out by the Tamil Nadu Water Supply and Drainage Board under pillur 3rd. scheme Amrut Project.

முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் எதிர்மனுதாரர் வாக்குமூலம் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் எழுத்துமூல வாக்குமூலம் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறியப்பட்டுள்ளன:–

முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் பிரதான கோரிக்கையாக கோயம்புத்தூர் மாநகராட்சியில் விளாங்குறிச்சி பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான Reserve site 22000 சதுர அடிக்கு மேல், தனி நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆக்கிரமிப்பிற்கு மாநகராட்சி அலுவலர்களும் உடந்தையாக இருந்துள்ளனர். இது தொடர்பாக கடந்த 9 ஆண்டுகளாக மாநகராட்சி அலுவலகத்தில் பலமுறை மனுக்கள் அளித்தும் சரியாக பதில்

அளிக்கவில்லை. ஆக்கிரமிப்பு நிலத்தை மாநகராட்சி வசம் கொண்டு வரவும், ஆக்கிரமிப்பிற்கு துணை போன மாநகராட்சி அலுவலர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

- கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் 258(4) 441 பிரிவுகளின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண்.32 SF No.264/1,265க்குட்பட்ட சிவராம் நகர் பகுதியில், மாநகராட்சிக்குச் சொந்தமான பூங்கா ஒதுக்கீட்டு இடத்தில் 138x85 என்ற அளவில் கோயில் மற்றும் நிரந்தர ஷெட் அமைத்து பொது ஜன போக்குவரத்துக்கும், பொது ஜன சுகாதாரத்திற்கும் இடைஞ்சலாக ஆக்கிரமித்து இருப்பதால் இந்த அறிவிப்பு கிடைத்த 7 தினங்களுக்குள் ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த வேண்டுமெனவும், தவறினால் 12.07.2021 தேதி அல்லது அதற்கு பிற்பாடு மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் இயந்திரங்களை கொண்டு இடித்து அப்புறப்படுத்தப்படும் என ஆக்கிரமிப்பாளருக்கு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்பதை மாநகராட்சி ஆணையர் அறிவிப்பிலிருந்து அறிய முடிகின்றது.
- மனுதாரர் பல ஆண்டுகளாக இந்த நிகழ்வு தொடர்பாக போராடிக்கொண்டுள்ளதை அறிய முடிகின்றது.
- மனுதாரர் இம்முறை மன்ற நடுவத்தில் தாக்கல் செய்த முறையீட்டு மனுவிற்குப்பின்பே மாநகராட்சி நடவடிக்கை தொடங்கியுள்ளது.
- ஆக்கிரமிப்பாளர்களுக்கு முறையாக சட்டப்படியான அறிவிப்பை முதலிலேயே கொடுத்து இருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது,
- பொதுப்பயன்பாட்டு இடங்களை பொதுப்பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்தையோ அல்லது நீதிமன்றங்களையோ நாடியே பொதுமக்கள் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டிய நிலை அகற்றப்பட வேண்டும்.

இந்நேர்வில் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ள ஆக்கிரமிப்புகள் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான பகுதியில் தனிநபரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதிகளை கண்டறிய ஒரு குழு அமைத்து மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் உள்ளஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடங்களை கண்டறிந்து ஆக்கிரமிப்புகளை அகற்ற உடனடியாக நடவடிக்கை விரைந்து மேற்கொள்ளுமாறு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தியும், ஆக்கிரமிப்பாளர்களுக்கு உடந்தையாக இருந்த சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கைக்கு பரிந்துரைத்தும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

It is extremely sad to observe that such daylight seizure of lands vested with the Corporation has gone unnoticed for several years by the Corporation especially the Zonal Officials responsible. It is common knowledge that OSR area and vacant lands that are legally owned by the Corporation are valuable in terms of their monetary status running into many crores of Rupees. The local Zonal officials have turned a blind eye to such stark and shocking violations by audacious encroachments by antisocial elements and land grabbers. The connivance and complicity of the zonal officials are condemnable. The Corporation Commissioner, Coimbatore is instructed to initiate severe disciplinary action against the delinquents responsible for such dreadful dereliction of duties.

An immediate survey of such lands owned and vested with the Corporation has to be ordered forthwith and completed within 3 months. All encroachments on the Corporation lands should be cleared with an iron hand without fear or favour and brought under the custody of the Corporation. A Committee of senior officials and engineers may be constituted for this purpose for absolute compliance with the orders of this authority. The Director of Municipal Administration is requested to pursue strict action and overseeing in the matter in order to recover the pricey Corporation lands under encroachment and restore to the custody of the Coimbatore Corporation.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு. குமார் தட்சிணாமூர்த்தி,
எண்.13, கணபதி மாநகர்,
கோயம்புத்தூர் –6.

2)ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்.

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

4) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

30/12/21

செயலாளர்